நம்பிக்கையில்தான் நாங்கள், எல்லாக் கட்சிக்காரர்களும், பேசுகிறோம். மீதி உங்கள் பிரியம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்வு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமலிங்கம், திரு. ஞானசேகரன், திரு. சிவபுண்ணியம், திரு. ஹேமச்சந்திரன் திரு. தாமரைக்கனி ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் எனக்கு அனுப்பியுள்ள தகவல்.

திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர், முன்னாள் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. எம்.ஜி. சுந்தரமூர்த்தி 8-5-2000 அன்று திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் அவரது தம்பி திரு. அரிதாஸ், அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிவித்ததன் பேரில் குற்ற எண் 125/2000-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

9-5-2000 அன்று காலை 9-00 மணியளவில் திருபுவனம் குட்டையில் அரிதாஸ் சடலம் கிடப்பதாக சுந்தரமூர்த்தி மீண்டும் புகார் செய்தார். அதன் பேரில் வழக்கு 'சந்தேக மரணம்' என்ற பிரிவுக்கு மாற்றப்பட்டது. காவல் துறையினர் அரிதாஸின் சடலத்தை திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றார்கள். பிரேதப் பரிசோதனையில் அரிதாஸினுடைய உடம்பில் இரண்டு தொடைகளிலும் சிராய்த்த காயம் காணப்பட்டது. இது தவிர, வேறு காயங்கள் இல்லை. பிரேதப் பரிசோதனை முடிந்த பிறகு உள் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அரிதாஸ் சடலம் வாகனத்தில் ஏற்றப்பட்டு அவருடைய வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

மாலை 6-30 மணியளவில் பிரேதத்தை எடுத்துச் சென்ற வாகனத்தோடு ஊர்வலமாக வந்து திருபுவனம் கடைத்தெருவில் நிறுத்தி அரிதாஸ் இறப்புக்குக் காரணமான குற்றவாளியைக் கைது செய்யக்கோரி இறந்தவரின் உறவினர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸாரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதுபோன்ற சாலை மறியல்களால்

கோரிக்கையை வலியுறுத்துவது ஒரு புறம் இருந்தாலும்கூட, சில நேரங்களில் சாலை மறியலைக் கைவிட வேண்டுமென்பதற்காக காவல் துறையினரேகூட யாரையாவது இரண்டு பேரைக் கைது செய்வோம் என்று, சம்பந்தம் இல்லாத நிரபராதிகளைக்கூட கைது செய்துவிடக் கூடும் என்பதை சாலை மறியலில் ஈடுபடுகின்றவர்கள் அல்லது அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர்கள் உணர வேண்டுமென்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு கும்பகோணம் வருவாய்க் கோட்ட அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சென்று பேச்சுவார்த்தை நடத்தி அது பயன்தராமல் போகவே, இரவு 9-20 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பிலே உள்ளவர்) மற்றும் காவல் கண்காணிப்பாளர் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தி இவ்வழக்கை மாவட்டக் குற்றப் பிரிவிற்கு மாற்றுவதாக உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது. இரவு 11-45 மணியளவில் உடல் தகனம் செய்யப்பட்டது. தற்போது அசம்பாவிதம் ஏதுமில்லை என்றாலும்கூட, இந்த நிகழ்வையும், வழக்கையும் C.B., C.I.D. பிரிவுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். இறந்து போனவருடைய கட்சி சார்பில் அவர்கள் பேசிய காரணத்தினாலும், அந்தக் கட்சிக்கு உரிய குரல் என்கின்ற முறையினாலும், மற்ற உறுப்பினர்கள் வலியுறுத்தலின் பேரிலும், இந்த அரசு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நியாயம் வழங்கக் கூடியது, நியாயத்தை நிலைநாட்டக் கூடியது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கின்ற வகையிலும், இந்த வழக்கை சி.பி. சி.ஐ.டி.-க்கு இந்த அரசு மாற்றித் தரும் என்ற செய்தியை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டதாக நம்முடைய தாமரைக்கனி சொன்னார். அதெல்லாம் அந்தக் காலம். காவல் துறையினுடைய கைகளைக் கட்டிப்போட்டு, கொடவாசல் நடத்துவதெல்லாம் அந்தக் காலம், இந்தக் காலத்தில் அல்ல என்பதையும் தெரிவித்து உரிய நடவடிக்கைகளை — ஆளுங்கட்சியா, எதிர்க்கட்சியா என்று பாராமல் — ஆளுங்கட்சிக்காரராக இருந்தாலும் எடுப்பதற்கு காவல் துறையினருக்கு இந்த அவையின் மூலமாக நான் அறிவுறுத்துகின்றேன். C.B., C.I.D. விசாரணையும் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த விசாரணைக்குப் பிறகு அந்தக் குடும்பத்திற்குத் தர வேண்டிய நிவாரண நிதியைப் பற்றிப் பிறகு அறிவிக்கலாம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.

முற்பகல் 10-45

(ஆ) திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை சாய்ந்து பெண் இறப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவில்லிபுத்தூரில் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை விழுந்து பெண் ஒருவர் இறந்தது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும், திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகர அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடைய சிலை இருக்கிறது. இந்தச் சிலையையும், அண்ணா பேருந்து நிலையத்தினுடைய வளைவையும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். அந்த அண்ணா சிலையினுடைய அஸ்திவாரம் சரியாக இல்லாத காரணத்தாலும், திருவில்லிபுத்தூர் நகரில் கனமழை பெய்த காரணத்தாலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு சோடியம் லைட் பக்கத்தில் போட்டார்கள், அதனால் ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டது, திருவில்லிபுத்தூர் அருகே உள்ள வத்திராயிருப்புக்கு அருகே உள்ள சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குச் செல்வதற்காக இலட்சுமி என்ற அம்மையார் அவர்கள் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். வரும்போது, மழை பெய்த காரணத்தாலும், அண்ணா சிலை ரொம்ப கொதிம்பிபோய் அஸ்திவாரம் சரியில்லாத காரணத்தினாலும் திடீரென்று அண்ணா சிலை விழுந்து அந்தப் பெண்ணை பள்ளத்தில் அமுக்கி இறக்க நேரிட்டது. அந்த அம்மையாருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள்; ஏழையெளிய தச்சுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; அன்றன்றைக்கு மரவேலை செய்து பிழைக்கின்ற குடும்பத்தைச்